12th August 1960]

Groundnut Flour Mills

*** 122 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN, Sri M. P. SARATHI :** } கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா :—

(அ) ஐ. நா. நிதி உதவியுடன், சென்னை ராஜ்யத்தில் வேர்க்கடலை பணியார மாவு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளதா ?

(ஆ) எந்தெந்த ஊர்களில் ?

(இ) தனியார் துறையிலா, பொதுத் துறையிலா ?

The Hon. Sri R. VENKATARAMAN (*a*) *to* (*c*) : The Government of India are contemplating the establishment of a plant in Madras State for the production of high protein food (groundnut flour) with the assistance of the United Nations Children's Fund. The location and other details of the plant are still under the consideration of the Government of India.

Agricultural Banks

*** 123 *Q.*—Sri P. G. MANICKAM :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா :—

(அ) 1959-ல் சென்னை ராஜ்யத்திலே எத்தனை விவசாய பாங்குகள் இருந்தன?

(ஆ) இப்பாங்குகளிலே எத்தனை விவசாயிகள் அங்கத்தினர்களாக இருந்தார்கள்?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Three hundred and thirty.

(*b*) As on 30th June 1959, the number of members in these banks was 264,291 (two lakhs, sixty-four thousand and two hundred and ninety-one).

Sri P. G. MANICKAM : ஸார், நடப்பு வருஷத்தில் இன்னும் எந்தெந்த இடங்களில் எவ்வளவு பாங்குகள் ஏற்படுத்தப்படும்?

The Hon. Sri R. VENKATARAMAN : ஒன்றும் ஏற்படுத்த உத்தேசமில்லை, அக்ரிகல்சுரல் பாங்குகள் இனிமேல் கூடுதலாக வைக்கக்கூடாது என்று நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

Sri M. D. THIAGARAJA PILLAI : அவ்வாறு பாங்குகள் ஏற்படுத்த வேண்டாம் என்று முடிவு செய்திருப்பதால், இனிமேல் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு என்ன முறைகளை அமைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனி சொஸைட்டி இருக்கவேண்டும் என்பதுதான் நமது சர்க்காருடைய கொள்கை, அதன் அடிப்படையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சொஸைட்டி ஏற்படுத்தவேண்டும்.